# மயிலாடுதுறை நகராட்சி

**2018–ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 23–ந்தேதி வியாழக்கிழமை காலை 11.30 மணிக்கு நடைபெற்ற அவசரக்கூட்ட நடவடிக்கை.**

**முன்னிலை:– திரு. எம். காந்திராஜ், பி.காம்., எம்.பி.ஏ.,**
**தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையர் (கூ.பொ)**
**மயிலாடுதுறை நகராட்சி**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| **23.08.2018** | 1) ரவி, வசந்தா, ராஜேஸ்வரி ஆகியோர் நகராட்சி ஆணையர் மயிலாடுதுறை அவர்கள்மீது O.S.No.171/2018, நிலம் தொடர்பாக மயிலாடுதுறை முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் நராட்சி சார்பாக, நகராட்சி வழக்கறிஞர் ஆஜராகி வழக்கு நடத்திடவும், அதற்கான செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>1. O.S.No.171/2018 வழக்கில் நகராட்சி வழக்கறிஞர் க. ராஜமோகன் ஆஜராகி வழக்கை நடத்திட அனுமதிக்கலாம்.<br>2. வழக்கு செலவினத்திற்கு அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 3556/2018/எப்1. | **தீர்மான எண்:379**<br>ஏற்றுக்கொள்ளப்பட்டது |
| | 2) சொத்துவரி – இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது வரிச்சீராய்வு மேற்கொள்வது குறித்து வரப்பட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.73, நாள்.19.07.2018 மற்றும் அ.ஆ.எண்–76, நாள். 26.07.2018 ஆகியவை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு: மன்றத்தில் பதிவு செய்யலாம்.<br>ந.க.எண். 3410/2018/எச்1. | **தீர்மான எண்:380**<br>ஏற்றுக்கொள்ளப்பட்டது |

<table>
<tr><td></td><td>3) பார்வை: 1. பல்லுயிர் பாதுகாப்பு சட்டம் –2002<br>2. பல்லுயிர் பாதுகாப்பு விதிகள்–2004<br>3. அரசாணை எண்.137. சுற்றுசூழல் மற்றும் வனத்துறை (FR5), நாள்.09.11.2017<br>பார்வையில் 1 முதல் 3 வரை சட்ட விதிகள் மற்றும் அரசாணையில் குறிப்பிட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி மயிலாடுதுறை நகராட்சியில் பல்லுயிர் பாதுகாப்பு நிர்வாக குழு (Biodiversity Management committee) அமைத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண். 3607/2018/எச்1</td><td>தீர்மான எண்:381<br>ஏற்றுக்கொள்ளப்பட்டது</td></tr>
<tr><td></td><td>4) 7th SPHC உயர்மட்டகுழு ஆய்வு கூட்ட நடவடிக்கை நாள். 13.08.2018–ன்படி மயிலாடுதுறை நகராட்சியில் கீழ்கண்ட திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளப்பட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட பணிகளுக்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ. எண்</th><th>பணிகள் விபரம்</th><th>மதிப்பீட்டு தொகை (லட்சத்தில்)</th></tr>
<tr><td>1</td><td>வார்டு எண்.7, திம்மநாயக்கன் படித்துறையின் நுண் உயிரி கிடங்கு அமைக்கும்பணி</td><td>60.00</td></tr>
<tr><td>2</td><td>வார்டு எண்.18, சமுதாய கூடத்தில் நுண் உயிரி கிடங்கு மற்றும் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி</td><td>64.00</td></tr>
<tr><td>3</td><td>வார்டு எண்.31, வண்டிப்பேட்டையில் நுண் உயிரி கிடங்கு அமைக்கும் பணி</td><td>60.00</td></tr>
<tr><td>4</td><td>44 Nos Battery Operated வாகனம் வங்குதல்</td><td>32.00</td></tr>
<tr><td>5</td><td>6 Nos Light Commercial வாகனம் வங்குதல்</td><td>33.60</td></tr>
<tr><td></td><td>கூடுதல்</td><td>250.00</td></tr>
</table>
மேற்கண்ட 5 பணிகள் ரூ. 250.00 லட்சத்தில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த தூய்மை இந்தியா திட்ட திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகளை வரிசை எண் 1 முதல் 3 வரை உள்ள பணிகளுக்கு நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி வழங்கிட வேண்டி கருத்துரு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு அனுப்பிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. வரிசை எண்.4 மற்றும் 5 பணிகளுக்கான நிர்வாக அனுமதி இந்நகர்மன்றம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>ந.க.எண்.1634/2018/இ1.</td><td>தீர்மான எண்:382<br>ஏற்றுக்கொள்ளப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>5) இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட சுயதொழில் புரிவோர், தொழில் முனைவோர், வியாபார நிறுவனங்கள் மற்றும் அரசு நிறுவனங்கனுக்கான தொழில்வரி 2018–2019 –ஆம் ஆண்டு 01.10.2018–ல் இருந்து சீராய்வு செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12503/2018/ஆர்1. நாள்.21.05.2018–ல் ஆணை பிறப்பிக்கப்பட்டது. மேற்படி சீராய்வு செய்த திருத்திய தொழில்வரி பலகையினை தினசரி நாளிதழான ‘தினபூமி’ நாளிதழில் 19.06.2018 அன்று வெளியிடப்பட்டது. மேற்படி வெளியிடப்பட்டதற்கான விளம்பர பட்டியல் தொகை ரூ.11,844/– (ரூபாய் பதினொன்றாயிரத்து எண்ணூற்று நாற்பத்து நான்கு மட்டும்) வரப்பெற்றுள்ளது. எனவே இத்தொகையினை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.1846/2018/அ3.</td>
<td>தீர்மான எண்:383<br>ஏற்றுக்கொள்ளப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>6) இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட சுயதொழில் புரிவோர், தொழில் முனைவோர், வியாபார நிறுவனங்கள் மற்றும் அரசு நிறுவனங்கனுக்கான தொழில்வரி 2018–2019 –ஆம் ஆண்டு 01.10.2018–ல் இருந்து சீராய்வு செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12503/2018/ஆர்1. நாள்.21.05.2018–ல் ஆணை பிறப்பிக்கப்பட்டது. மேற்படி சீராய்வு செய்த திருத்திய தொழில்வரி பலகையினை மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்திட அரசு தலைப்பில் செலுத்திட புதுக்கோட்டை அரசு அச்சகம் மூலம் தெரிவித்துள்ள தொகை ரூ. 2100/–ஐ (ரூபாய் இரண்டாயிரத்து நூறு மட்டும்) இந்நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.1846/2018/அ3.</td>
<td>தீர்மான எண்:384<br>ஏற்றுக்கொள்ளப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>7) இந்நகராட்சி பொது நிதியின் கீழ் கீழ்கண்ட பணியினை செய்திட 20.08.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை தனிஅலுவலரின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>
<table>
<tr><th>வ. எண்</th><th>வேலையின் விபரம்</th><th>ஒப்பந்த மதிப்பு ரூ.</th><th>ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு ஒப்பந்ததாரர்கள் பெயர் திருவாளர்கள்</th><th>மதிப்பீட்டைவிட குறைவு/ மதிப்பீட்டைவிட அதிகம்</th><th>குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள்</th></tr>
<tr><td>1</td><td>2</td><td>3</td><td>4</td><td>5</td><td>6</td></tr>
<tr><td colspan="6">பொது நிதி</td></tr>
<tr><td>1</td><td>பொதுசுகாதாரப்பிரிவில் குப்பைகள் அகற்ற</td><td>80,000/-</td><td>பாப்புலர் ஆட்டோகேர் மயிலாடுதுறை</td><td>ரூ. 79,900/- குறைவு</td><td>பாப்புலர் ஆட்டோகேர் மயிலாடுதுறை.</td></tr>
</table></td>
<td>தீர்மான எண்:385<br>ஏற்றுக்கொள்ளப்பட்டது</td>
</tr>
</table>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பயன்படுத்தப்படும் டராக்டர் டிப்பர் வாகனம் என். **TN51P 3556 & 3558**-க்கு பழுதுநீக்க பணிகள் மேற்கொள்ளுதல் | | குரு ஆட்டோ கேரேஜ் தஞ்சாவூர். | ரூ. 86,010/- அதிகம் | |

அலுவலககுறிப்பு : 1. பட்டியலில் கண்டுள்ள கலம் எண்.6–ல் குறிப்பிட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

2. பொது சுகாதார பணியின் அவசரம் அவசியம் கருதி பணி உத்தரவு வழங்கியதற்கு தனி அலுவலர் பின்னேற்பு வழங்கலாம்.

**ந.க.எண்.** 2727/2018/எச்1

| | | |
|---|---|---|
| | 8) மயிலாடுதுறை நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவில் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் தகவல், கல்வி தொடர்பு நடவடிக்கைகள், திறந்தவெளியில் மலம் கழித்தல் மற்றும் சிறு நீர் கழித்தலால் ஏற்படும் சுகாதார சீர்கேடு, திடக்கழிவுகளை குறைத்திடும் வழிமுறைகள், திடக்கழிவுகளை மறுசுழற்சி செய்தல் மற்றும் மீண்டும் பயன்படுத்துதல் போன்ற விழிப்புணர்வு பணிகளுக்காக 9 பரப்புரையாளர்கள் மற்றும் 2 மேற்பார்வையாளர்கள் ஒருவருட காலத்திற்கு வெளிகொணர்வு முகமை மூலம் தற்காலிகமாக நியமிக்கப்பட்டு கடந்த அக்டோபர் 2017 முதல் இந்நகராட்சியில் பணிபுரிந்து வருகின்றனர். இந்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.26458–1/2016/தி1. நாள்.31.07.2018– ஆம் தேதிய கடிதத்தில் எதிர்வரும் 30.09.2018 அன்றுடன் ஒப்பந்தகாலம் முடிவடையும் நிலையில் மேலும் 3 மாதங்களுக்கு காலநீட்டிப்பு செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. அதற்கான ஊதிய தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிடவும், அதற்கான தொகையினை அரசிடமிருந்து பெற்றவுடம் ஈடு செய்து கொள்ளவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே அக்டோபர் 2018 முதல் டிசம்பர் 2018 வரை 3 மாதங்களுக்கு நகராட்சி பொது நிதியிலிருந்து ஊதியம் ரூ.500000/– ( ஐந்து லட்சம்) வழங்கிட செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.3445/2017/எச்1. | **தீர்மான எண்:386**<br>ஏற்றுக்கொள்ளப்பட்டது |
| | 9) அரசாணை எண்.78 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை UD4(3) நாள்.04.05.2017 மற்றும் அரசாணை எண். 172 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை UD4(3) நாள்.13.10.2017–ன்பேரில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் கடிதம் ந.க.எண். 588/2018/தம 3 நாள்.16.04.2018–ல் கொ.ஒ.ம.வ / ந.ஊ.து.இ(தம) எண்.216/2018–ன்படி சாலை, பூங்கா, இடத்தினை தானபத்திரம் மூலம் (ஆவண எண்.1609/2018) மயிலாடுதுறை நகராட்சி ஆணையர் பெயரில் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி சாலை 8924 சதுரடி (அ) 829.06$m^2$ பூங்கா 2363 சதுரடி (அ) 219.52$m^2$ இடத்தினை நகராட்சி ஆணையர் பெயரில் பட்டா மாற்றம் செய்து கொடுக்க தனிவட்டாட்சியர் நத்தம் நிலவரித்திட்டம் மயிலாடுதுறை அவர்களிடம் தெரிவிக்கலாம். மேற்படி தானபத்திரம் ஆவணம், மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: | **தீர்மான எண்:387**<br>ஏற்றுக்கொள்ளப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 1. சர்வே வார்டு எண்.8, பிளாக்.16, நகரளவு எண்.746/2–ல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவில் உள்ள சாலை மற்றும் பூங்கா இடத்தினை தானபத்திரம் பெற்றுக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி மனைப்பிரிவில் அமையும் சாலை மற்றும் பூங்கா இடத்தினை தனிவட்டாட்சியர், நத்தம் நிலவரித்திட்டம், மயிலாடுதுறை அவர்கள் நகராட்சி ஆணையர் பெயரில் பட்டா மாற்றம் செய்து கொடுக்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2846/2018/எப்1. | |
| 388 | **10)** மயிலாடுதுறை நகராட்சி பாதாள சாக்கடை திட்டம் பராமரிப்பு மற்றும் இயக்குதல் தனியார் வசம் மூன்று ஆண்டுகள் மேற்கொள்ளும் பணிக்காக 01.08.2014ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது.<br>1) Anchor Ceramics(P) Ltd., Chennai மற்றும்<br>2) Pure Enviro Engineering (P) Ltd., Chennai<br>ஆகிய இரு நிறுவனங்கள் மூலம் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதில் தகுதி வாய்ந்த நிறுவனமான Anchor Ceramics(P) Ltd., Chennai நிறுவனத்தாருக்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.458 நாள்.26.08.2014 அலுவலக குறிப்பில் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்று ஒவ்வொரு வருடமும் மன்ற பார்வைக்கு வைத்து பணி நீட்டிப்பு வழங்க தீர்மானிக்கப்பட்டது அதன்படி 26.08.2014 தேதியில் முதல் வருடத்திற்கான வேலை உத்திரவு வழங்கப்பட்டது. உத்திரவு காலம் ஆகஸ்ட் 2015ம் மாதத்தில் முடிவடைவதாலும் பணியின் அவசியம் கருதி அடுத்த வருடங்களுக்கு பணி நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கிட மன்றத்தின் அனுமதி கோரப்பட்டதில் மன்ற தீர்மான எண் 185 நாள்.25.08.2015ல் இரண்டாம் வருடத்திற்கான பணி உத்திரவு வழங்கிட அனுமதியளிக்கப்பட்டதின்படி பணி உத்திரவு வழங்கப்பட்டது. இதன் பணி உத்திரவு காலம் ஆகஸ்ட் 2016ம் மாதத்துடன் முடிவடைவதால் மூன்றாம் ஆண்டுக்கான பணி நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கிட மன்றத்தின் அனுமதி கோரப்பட்டதில் மன்ற தீர்மான எண்.204 நாள் 02.09.2016ல் மூன்றாம் வருடத்திற்கான பணி உத்திரவு வழங்கிட அனுமதியளிக்கப்பட்டதின்படி பணி உத்திரவு வழங்கி பணி முடிக்கப்பட்டது. மேலும் இந்நகர்மன்ற தீர்மான எண்.172 நாள் 22.08.2017ன் படி செப்டம்பர் 2017 முதல் ஆகஸ்டு 2018 வரை ஓராண்டு காலத்திற்கு ரூ.111.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டதின் பேரில் பணி உத்தரவு வழங்கி பணி நடைபெற்று வருகிறது. தற்போது ஆகஸ்ட் 2018ம் மாதத்துடன் பணிக்காலம் முடிவடைவதால் அடுத்த ஆண்டுகளுக்கான இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள உரிய திட்ட மதிப்பீடு தயாரித்து நகராட்சி நிர்வாக இயக்குநரின் அனுமதி பெற வேண்டியுள்ளதால், இதற்கு 3 மாத கால அவகாசம் தேவைப்படுவதால், அவசர அவசியம் கருதி மூன்று மாதங்களுக்கு அதே விலை விகிதத்தில் அதே ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு: 1. அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 7724/2017/இ1 | **தீர்மான எண்:388**<br>ஏற்றுக்கொள்ளப்பட்டது |